சமுதாயப் பிரச்சனை

238.P/301

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

72
தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

| | | | பக்கம் |
|---|---|---|---|
| நினைவுச் சின்னம் | ... | ... | 1 |
| நம் நாட்டின் எதிர்காலம் | ... | ... | 2 |
| சீதனம் | ... | ... | 3 |
| சாதி | ... | ... | 6 |
| மொழிப் பிரச்சனைகள் | ... | ... | 8 |
| விஞ்ஞானம் | ... | ... | 10 |
| பண்புள்ள வாழ்க்கை | ... | ... | 13 |
| இனக்கலவரம் | ... | ... | 15 |
| விவசாயம் | ... | ... | 19 |
| எனது மலேயா வாழ்க்கை | ... | ... | 21 |
| மகாத்மா காந்தி | ... | ... | 26 |

238.8
சுந்தரம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

அன்பர் மு. பரமநாதன் அவர்கள் எழுதிய சமுதாயப் பிரச்சனைகள் என்ற நூலின் கட்டுரைகளைப் பார்க்கும் சந்தர்ப்பம் நமக்குக் கிடைத்தது.

குறிப்பாக, சமுதாயத்தில் சீர்திருத்தம் ஏற்பட வேண்டுமென்று விரும்புபவர்களில் இவரும் ஒருவர் மற்றவர்கள் நினைவோடு நின்றுவிட, இவர் செயலாக்கி, புத்தக ரூபமாக வெளியிடுவது கால மாற்றத்தைக் காட்டுகின்றது.

மேலும் இதிலுள்ள கட்டுரைகள் க. பொ. த. (சாதாரணம்), க பொ த (உயர்தரம்) மற்றும் தே பொ. க. த. மாணவர்கள் படிப்பதனால் இதுபோன்ற கட்டுரைகள் பரீட்சைக்கு எழுத ஒரு வழிகாட்டியுமாகும். பெரியோர்களும் படித்து இன்புறுவதற்கும் இடமுண்டு.

இப்புத்தகத்தை ஆதரிப்பதன் மூலம் தமிழ் மக்களும் மாணவர்களும் சிறந்த எதிர்காலத்தைச் சிருட்டித்தவர்கள் ஆவார்கள்

இதுபோன்ற கட்டுரைகள் தொடர்ந்தும் வெளிவர வேண்டும்.

கு. பொன்னையா,
முன்னாள் தமிழ் ஆசிரியர்,
சிலாங்கூர், மலாயா.

20-9-77.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

# முன்னுரை

யான் இருபத்துமூன்று வருடங்கள் மூன்று மாதங்களாக அரசாங்க சேவையில், எழுதுவினைஞராகக் கடமையாற்றினேன். இக்குறிப்பிட்ட காலத்திற்குள் நான் பலவிதமான மக்களுடன் பழக நேரிட்டது. ஆதலினால், இவர்களுடைய இன்ப துன்பங்களை நேரடியாகக் கண்டு, சந்தோஷமும் அடைந்திருக்கிறேன், துன்பமும் கொண்டிருக்கிறேன்.

பிரதானமாக நடுத்தரக் கீழ் வகுப்பினரும், ஏழைத் தொழிலாளிகளும் பட்ட இன்னல்களையும், இடைஞ்சல்களையும் கண்டு மனமுருகியிருக்கிறேன். பொருளாதார நிலையில், இவர்கள் நிலை படுமோசமாகவே இருந்து வந்திருக்கிறது. இப் பரிதாபநிலை சீரடைய வேண்டும் மற்றும், சமுதாய முன்னேற்றத்திற்குச் சில பல தேவையுள்ள பிரச்சனைகளுக்குத் தீர்வு காண வேண்டுமென்ற நோக்கத்துடனே இப்புத்தகத்தை வெளியிடுகிறேன். இதில் ஏதேனும் குறைகள், குற்றங்களிருந்தால் என்னை மன்னிக்கும்படி வாசகர்களைத் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன், பொதுநல சேவா சங்கம், காரைநகர்ச் செயலாளராக மூன்று வருட காலங்கள் — 1971 தொடக்கம் 1973 வரை — செயலாற்றியுள்ளேன்.

எனக்கு நல்ல ஞாபகமிருக்கிறது, இக்காலத்தில் அநேகர் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெய்வங்களாகக் கருதி, துதி செய்து வந்தனர். உண்மைகளை எடுத்துரைக்கப் பயந்திருந்தனர். எத்தனையோ கரைச்சல்களுக்குமிடையில் எனது செயலாளர் கடமையில் மற்றவர்கள் குறை கூறாவண்ணம் நடந்துவந்தேன்.

ஒரு நாடு சர்வதுறைகளிலும் முன்னேற்றங் காணவேண்டுமாயின், ஓர் உண்மையான ஜனநாயக சோஸலிசக் கொள்கையைக் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும். உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் வேற்றுமை இருக்கப்படாது. சமதர்ம வாழ்க்கையே நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

கடைசியாக, எனது கட்டுரைகளைத் தங்கள் சிரமங்களைக் கருதாது பார்த்த பண்டிதர் சு. வேலாயுதபிள்ளை ஆசிரியர் அவர்களுக்கும், வித்துவான், சைவமணி மூ. சபாரத்தினம், ஆசிரியர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன், திரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கு பொன்னையா, முன்னாள் ஆசிரியர், சிலாங்கூர், மலேயா அவர்களுக்கும், இந்நூலுக்கு முகவுரை எழுதியமைக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் ஸ்ரீ சண்முகநாத அச்சகத்தாருக்கும் மிகச் சிரத்தை எடுத்து அச்சடித்தமைக்கும் எனது நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

வணக்கம்.

மு. பரமநாதன்

சந்தன்புளியடி,
காரைநகர்.
10-10-77.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுச் சின்னம்

உலகின் பல தேசங்களிலும் சுதந்திரத்திற்காகவும், நாட்டு முன்னேற்றத்துக்காகவும், காலத்துக்குக் காலம் அரும்பெருந் தலைவர்கள் தோன்றியிருக்கின்றார்கள். இவர்கள் மக்கள் மனத்தில் நீங்கா இடத்தைப் பிடித்துக் கொண்டார்கள். உதாரணமாக மகாத்மா காந்தி, ஜோர்ஜ் வாஷிங்டன் என்பவர்களைக் குறிப்பிடலாம். இவர்களின் ஞாபகச் சின்னமாக பலவிதமான வேலைப்பாடுகள் நடந்துள்ளன. இதேபோல் அமரர் செல்வநாயகத்துக்கும் ஒரு நினைவுச் சின்னம் அமைக்க வேண்டுமென்று யோசிக்கின்றார்கள். அதைப் பற்றிய எனது கருத்துக்களையும் கீழே குறிப்பிடுகின்றேன்.

ஈழநாடு 1-8-77 திங்கட்கிழமை முற்பக்கத்தில் மேற்குறிப்பிடப்பட்ட தலையங்கத்தின் கீழ் அமரர் திரு. S. J. V. செல்வநாயகம், கலைஞர் மு. கருணாநிதி, மற்றும் திரு. வி. எஸ் துரைராஜாவின் படங்களும் அதோடு வந்த செய்தியையும் மிகக் கவனமாக வாசித்தேன்.

எத்தனையோ இளைஞர்களும், யுவதிகளும், மற்றும் ஏனையோரும் வேலைவாய்ப்பின்றி, அல்லும் பகலும் கண்ணீருடன் வாழ்ந்துவரும் இந்நிலையிலிருக்கும்போது, மூன்றரை லட்சம் ரூபாவைச் செலவு செய்து, அமரர் செல்வா நினைவாக இக்கட்டடத்தை எழுப்ப எண்ணுவது வரவேற்கக்கூடிய ஒரு செயலாகத் தெரியவில்லை.

வீணே பணத்தைச் செலவிடுவது புத்தி சாதுர்யமான செயலல்ல வென்று குழுவினருக்குக் கூறிவைக்க விரும்புகிறேன். தனியாய்த் தவித்து, எத்தனையோ மக்கள் நம்மிடையே ஒருநேரச் சாப்பாட்டைத்தானும் சரிவரச் சாப்பிட்டுச் சந்தோஷமாக வாழவழியின்றி இருக்கும்போது இடாம்பீகமாகச் செலவு செய்யக்கருதுவது அவ்வளவு அழகாகத் தோன்றவில்லை.

இதனால், நான் அமரர் செல்வநாயகத்துக்கு ஞாபகச் சின்ன வேலையைச் செய்ய வேண்டாமென்று கூற முன்வரவில்லை. அதற்குப் பதிலாக, ஒரு சிக்கனமான முறையில் இக்கைங்கரியத்தைச் செய்ய வேண்டுமென்பதே எனது நல்லெண்ணமாகும்.

அத்துடன் கூடிய தொகைப் பணத்துக்குச் சில தொழிற்சாலைகளை நிறுவி அவர் நினைவாக எத்தனையோ பேருக்கு "அமரர் திரு. S. J. V. செல்வநாயகத்தின்" நாமத்தில் வேலைவாய்ப்புக்களை வழங்கலாம் என்பது எனது உண்மையான உள்ளக்கருத்தாகும்.

இன்னுமொன்றும் செய்ய முன்வரலாம், பரம ஏழைப்பிள்ளைகள் மேற்படிப்பில் படித்து உலகுக்கும், நாட்டுக்கும் நன்மை செய்யக்கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுதியிருந்தால், அவர்களை "அமரர் செல்வா நாமத்தில்" புலமைப் பரிசில் வெளிநாடுகளுக்கு அனுப்ப ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பது பெருங் கைங்கரியமாகும்.

இன்னும் இப்படியான நல்ல பயனையளிக்கக்கூடியதன் மூலம் சம தர்மத்தை சோஸியலிச ரீதியில் நிலைநாட்ட நல்ல தக்கதருணம் என் பதைக் குழுவினருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேனே.

வாழ்க அமரர் செல்வநாயகம்! வாழ்க தமிழ் ஈழம்!

---

# நம் நாட்டின் எதிர்காலம்

சென்ற ஏழு வருட காலமாக இலங்கை மக்கள், குறிப்பாகத் தமிழ் மக்கள் எந்நேரமும், எங்கும், எப்பொழுதும் ஒரு விதமான ஏக்க வாழ்க் கையையே வாழ்ந்து வந்தார்கள்.

பொலிஸ்காரர்களுக்கும், பட்டாளகாரருக்கும், காடையருக்கும், கொள்ளையருக்கும், திருடர்களுக்கும் பயந்திருந்து ஒரு கலக்க நிலையில் தங்கள் வாழ்க்கையை வாழவேண்டியதாகவிருந்தது. இன்னும். சில பல இடங்களில் அட்டகாசங்கள் அசம்பாவித சம்பவங்கள், நடைபெற்று வருகின்றன. ஆனால். இவ்வன்செயல்கள் நீடிய நாட்களுக்கு நீடிக்க மாட்டாது என்பது எனது எண்ணம்

குறிப்பாக ஏழு வருட காலமாக மலைநாட்டுத் தமிழர்கள் நரக வாழ்க்கையையே வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் பட்ட வேதனையை எடுத்து இயம்ப வேண்டிய அவசியமில்லை! உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி, இருக்க இடமின்றி தெருத்தெருவாக அலைந்து திரிந்த கோரக் காட்சிகளை எண்ணிப் பார்க்கும்போது, மனித வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் மனம் உருகுவார்கள்

எங்கள் நல்ல காலத்துக்கு, மீண்டும் ஜனநாயகம் வெற்றிக்கொடியை இலங்கை மண்ணிலே நட்டு இப்போ அக்கொடி நாலாபக்கமும் அசைந்து ஆடிக்கொண்டிருக்கிறது

பயங்கர ஏழு வருடங்களுக்குப் பின்னர், இப்பொழுதுதான் இலங்கை வாழ் மக்கள். ஜனநாயகத்தின் வெற்றி காரணமாக சுதந்திரக் காற்றை மகிழ்ச்சியுடன் சுவாசித்துக் கொண்டு வருகிறார்கள். சோஷலிசம் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமத்தில் சென்ற அரசு, ஒரு கோரத்தனமாக ஆட்சிபுரிந்து வந்தது. சாமான்யமான உணவுப் பொருட்கள், உடுக்கும் உடைகள் யாவையிலை, குதிரைவிலையாக இருந்தது

ஆனால், இனிமேல் விலைவாசிகள் குறைந்து மக்கள் சுபீட்சமான வாழ்வு வாழ்வார்கள் என்பதில், எவ்வித ஐயமும் ஏற்படத் தேவையில்லை. தமிழருக்கும் நல்லதொரு எதிர்காலம் அவர்களை நோக்கிக் கொண்டிருக்கிறது. 139 தொகுதியிலும் வெற்றிபெற்ற, ஐக்கிய தேசியக் கட்சி தமிழருக்குக் குறைந்த கோரிக்கையான பாரம்பரியமான தமிழ் ஈழமக்களினுடைய மண்ணில், மேலும் வலோற்காரமாக சிங்கள மக்களை குடியேற்றுவதை விட்டுவிட வேண்டும். அப்படிப்பட்ட எண்ணம் அவர்கள் மனதில் குடிகொண்டிருந்தால் அவ்வெண்ணத்தை அகற்றிவிட வேண்டும் இரண்டாவதாக ஈழத் தமிழர்கள் வாழும், தமிழ் ஈழத்தில், தமிழ் மொழியை அரசகருமமொழியாகப் பாவிப்பதற்கு, புதிய அரசாங்கம் நாட்களை நீடிக்காமல் அதனைச் சட்ட ரீதியாக உரிமை வழங்க வேண்டும்.

இவ்விரண்டும், ஈழம் வாழ் தமிழ் மக்களுக்குக் கிடைக்குமாயின், சிங்கள - தமிழ் ஒற்றுமை நீண்ட காலத்துக்கு நிலவிவரும் என்பதில் ஐயமில்லை அத்துடன் இருவரும் நேசக்கரங்களை நீட்டி, ஒருவரையொருவர் தழுவி, அன்னியோன்யமாக வாழ்வார்கள். இலங்கையும் செழுமை மிக்க நாடாக விளங்கும் உலக மக்கள் யாவரும் இலங்கையைப்பற்றிப் புகழ்பாடுவார்கள். உலக அரங்கில் எல்லோராலும் போற்றப்பட்ட நாடாக விளங்கிவரும்.

---

# சீதனம்

இந்தச் சீதனப் பேய், மக்கள் மத்தியில் நடமாடும் வரைக்கும், தமிழ் சமூகமாயிருந்தாலும் சரி அல்லது ஏனைய சமூகமாயிருந்தாலும் சரி, வாழ்வில் சரியான முன்னேற்றங் காண்பது மிகக் கடினமாகும்.

ஆதலினால் இப்பண்பாடல்லாத பழக்கத்தை முதலில் ஒழித்துக் கட்ட வேண்டும் அன்று பெண்பகுதியார் தங்களின் மகளின் பாதுகாப்புக்காக கொஞ்சம் பணத்தையோ அல்லது நெற்காணியையோ கொடுத்துதவினார்கள்.

இன்றோ நிலைமை மாறிவிட்டது மாப்பிள்ளை பகுதியினர், பெண் பகுதியினரிடமிருந்து குரவளைப்பிடியில் பெருந்தொகைப் பணத்தை வாங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியாணங்களை நடாத்தி வருகிருர்கள். அதுவும், அரசியல் உத்தியோகத்தில் உயர்பதவி வகிக்கும் மாப்பிள்ளைக்குத்தான் சீதனம் அதிகமாகக் கொடுக்க வேண்டிய கேடுகெட்ட நிலை நிலவி வருகிறது.

இத்துடன், நின்றுவிடவில்லை. சிலர் சீதனமாகவும், இனுமாகவும் மற்றும் மாப்பிள்ளை வீட்டாருக்குக் கலியாணத்துக்குச் செலவழிக்கப்பட வேண்டிய பணத்தையும், வாங்கிக்கொண்டுதான் திருமணங்களை ஒப்பேற்றி வைக்கிருர்கள்.

சீதனம் கொடுக்கும் பழக்கம் முற்ருக முன் இருக்கவில்லையென்று நான் கூறவரவில்லை பெண்ணின் பெற்ருேர்கள் தங்களது மகளின் எதிர்கால நலன் கருதித்தான், தங்களிடம் இருக்கும் சொற்ப பணத்திலோ அல்லது வசிக்கும் வளவிலோ அல்லது நெற்காணியிலோ, சொத்தை மனப்பூர்வமாகக் கொடுத்துதவிஞர்களேயொழிய மாப்பிள்ளையின் பெற்ருேர்கள் வலோற்காரமாக வாங்கியதாக நானறியேன்.

இவ்வுதவியைப் பெற்ருேர் செய்வதற்கு நல்ல தகுந்த காரணமுண்டு. அதாவது; விதியாப்பிரகாரமாக மாப்பிள்ளை திடீரென மரணமுற்ருல், அப்பெண்மணி பெற்ருேர் கொடுத்த செல்வத்தைக் கொண்டு காலங் கழிக்கலாம்! இதுதான் உண்மையான காரணமேயொழிய வேருென்றுமில்லை.

இது ஒருபுறமிருக்க, இன்னுமொரு புறத்திலே ஆணுக்கும் பெண்ணுக்கும் காதல் தோன்றுகிறது நான் இங்கு அந்தக் காலத்துத் தெய்வீகக் காதலைக் குறிப்பிடவில்லை. இது ஒரு நவநாகரீகமான, ஒரு விசித்திரமான காதலென்றே குறிப்பிட விரும்புகிறேன். என்ன? ஆண் பேதைப்பெண்ணைக் காதலிக்கிருன் காதல் வளர்ந்து கொண்டு போகிறது. இடைநடுவில் காதலுக்கு ஒரு இடைவேளை (Interval) ஏற்படுகிறது.

இந்த இடைவேளையில் காதலன் கூறுகின்ருன் காதலிக்கு யான் என் செய்வேன் என்னைப் பாலூட்டித் தாலாட்டி வளர்த்த தாயும், என்னைப் படிப்பித்த தந்தையும் "அடா பாவிப் பயலே! சீதனமில்லாமல் ஒரு வெறும் பெண்ணைக் காதலித்து அவளைத்தான் செய்வேன், இல்லாவிடில் செய்யமாட்டேன் என்று பிடிவாதம் பண்ணுகிருயே மகனே! ஏதோ, முயற்சி செய்து வாங்கக்கூடிய சீதனத்தை வாங்கிக் கல்யாணம் செய்" என்று எச்சரிக்கை செய்கிருர்கள்,

காதலன், பேயுக்கும், நடுக்கடலுக்குமிடையில் நின்று தத்தளிக்கிருன்! ஈற்றில், காதலனின் அவலநிலையைக் கண்டு பேதைப்பெண் பெற்ருேரை வருத்தி, வற்புறுத்தி இவ்வளவு தொகைப் பணமோ அதற்கு ஈடாக காணியோ, வீடு வளவோ தரும்படி வாதடி, வாங்கிக் கொடுக்கிருர்கள். இல்லையெனில், கலியாணம் ஒப்பேறமாட்டாது இவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறு அப்பெண் சீதனத்தை வாங்குவது பாரதூரமான குற்றமெனக் கருதவில்லை.

அடுத்த விதமான காதலைப் பற்றிக் கொஞ்சம் கூற விரும்புகிறேன். ஒரு ஆண் ஒரு பெண்ணை மனமார விரும்புகிறான் இருவரும் ஒருவரை யொருவர் மனப்பூர்வமாகக் காதலிக்கின்றனர். ஆணின் பெற்றோருக்கு இதனைப் பற்றித் தெரியாது அவர்கள் மகனை ஒன்றுமே கேளாமல் ஒரு பெரிய செல்வந்தர் வீட்டில் சீதனத்துக்காக திருமணப் பேச்சை நடாத்து கிறார்கள். சடங்குக்கான சம்பிரதாயங்கள் எல்லாவற்றையும் செய்கிறார் கள் கடைசியாக. பெற்றோர்கள் மகனை அழைத்து தாங்கள் பேசிய சடங்கைச் செய்யுமாறு வற்புறுத்துகிறார்கள். மகனுக்கு பெற்றோர் பேசிய சடங்கைப்பற்றி ஒன்றுமே தெரியாது. பெற்றோருக்கும் மகனின் காதல் பற்றி தெரியாது.

இந்நிலையில், மகன் உள்ளதைச் சொல்லுகிறான். பெற்றோர் மனம் கலங்கி நிற்கிறார்கள். மகனுக்கும். அதே நிலைதான் இக்கட்டத்தில் நடப் பது என்னதென்பதைப் பார்ப்போம் "தாய் சொல்லுகிறாள்." என் சொல்லைத் தட்டி நீர் காதலியை மணம் புரிவதாயிருந்தால் என் பிரே தத்தைக் காண்பாயேயொழிய, நான் உயிருடன் வாழ்வதைக் காண மாட்டாய்.

மகனின் (காதலன்) நிலையைக் கூறவா வேண்டும்! ஏதோ சாக்குப் போக்கைச் சொல்லிக் காதலியைக் கைவிட்டுவிடுகிறான். தாயே, உன் சொல்லின்படியே, நீங்கள் பேசிய பெண்ணைத் திருமணம் செய்கிறேன் என்கிறான், தடல்புடலாக மேளவாத்தியங்களுடன் திருமணம் சிறப்பாக நடக்கிறதே என்று எல்லோரும் பேசிக்கொள்கிறார்கள். ஆனால், ஒரு அபலைக் காதலியின் நெஞ்சம் குமுறுகிறதென்பதைப் பற்றி யாரறிவார்?

இதிலிருந்து என்ன உண்மையை அறிகின்றோமென்றால் இன்றைக்கு நடக்கும் அதிகமான திருமணங்கள் சந்தை வியாபாரமேயொழிய வேறொன்றுமில்லை. தெய்வீகக் காதல் கலியுக காலத்தில் மூழ்கிவிட்டது. இதற்குப் பொறுப்பாயிருக்கிறவர்கள் ஏழேழு பிறவியெடுத்தாலும், பாவம் அவர்களை விட்டு அகலாது. இதற்கெல்லாம் காரணம் சீதனத் தின் சீர்கேடாகும். இச்சீதனத்தை ஒழித்தால் நம் சமூகம் சீர்பெறும்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதி

இந்தச் சாதித் துவேஷம் தமிழ்ச் சமுதாயத்திலிருந்து நீங்கும் வரை, சில பல துறைகளில் முன்னேற்றங் காண்பது சிரமமாகவேயிருந்துவரும், எனினும், இளம் சமுதாயத்தினர் இப்பாகுபாட்டை அதிகம் கருதுவது இடையாது.

பண்டு தொட்டு வந்த இந்தக் குறைபாட்டை திடீரென ஒழித்துக் கட்ட முடியாது. அல்லது சட்ட ரீதியாகவோ, இதனை இல்லாமற் பண்ணி விட முடியாது. ஆனால், காலக்கிரமத்தில் இச்சாதிப்பாகுபாடு மனமாற்றத்தின் காரணமாகத் தானே அழிந்தொழிந்துவிடும் என்பதில் நம்பிக்கையுண்டு

ஆனால், மற்ற நாட்டவரிடம் சாதிப்பாகுபாடு இல்லையென்று கூற முடியாது இங்கிலாந்து, சீனு, மலேயா, இந்தியா, டச்சு நாட்டவர் களுக்கிடையே சாதிப்பாகுபாடு இருந்து வருகிறது. இது உலகோர் அறிந்த உண்மை.

எனினும், இந்நாட்டவர்கள் பொதுவிடங்களில் இவ்வேற்றுமையை வெளியாகக் காட்டுவதில்லை உதாரணமாக சாப்பாட்டுக் கடைகளில் தெய்வ வழிபாட்டு இடங்களில். கல்லூரிகளில், வாசிகசாலைகளில், மற் றும் இப்பேர்ப்பட்ட இடங்களில் ஒன்முகக் கூடிப் பழகிவருகிருர்கள்.

இச்செயல்களை காலந்தாழ்த்தித்தான் இந்து சமூகத்தினர் இப்போ உணர்ந்து செய்து வருகிருர்கள். ஆனால் வேகம் போதாது! பொதுக் கிணறுகளில் தண்ணீர் கிள்ளிப் பாவிக்கவும் விடவேண்டும். இதனுல், தமிழருக்கும், இந்துக்களுக்கும் பெருமை கிட்டும். அத்துடன் இந்து சமயத்திலிருந்து வெவ்வேறு சமயங்களுக்கு, தாழ்த்தப்பட்டவர்கள், மாற வும் மாட்டார்கள்!

இத்தொடர்பில், ஒரு உண்மையைக் குறிப்பிட விரும்புகிறேன். இவ்வுண்மையை மறைக்கவோ, மறுக்கவோ முடியாது! சில ஹரிஜனத் தவர்கள் இந்து சமயத்திலிருந்து, புத்தசமயத்துக்கோ, அல்லது கிறீஸ்தவ சமயத்துக்கோ, அல்லது முஸ்லீம் சமயத்துக்கோ மாறுவதினுல் அவர் கள் சாதியில் உயர்ந்துவிட்டார்களென்று ஒரு போலி நம்பிக்கையில் ஈடுபட்டுவிடுகிருர்கள்

ஆனல், நடைமுறையில் மற்ற மதத்தவர்களிடையே சாதிப்பாகுபாடு அறவே இல்லையென்று கருதமுடியாது நான் கீழே என் கூற்றுக்கு போதிய, தெளிவான ஆதாரங்கள் தருகிறேன். அவையாவன இங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாந்து தேசத்திலே, அரச குடும்பத்தினர், பிரபுக்கள், மற்றும் இரண்டொன்று உயர்குலத்தவர்கள் என்று கருதுபவர்கள் உண்டு. கடைசியாகத்தான் சாதாரண மக்கள் காட்சியளிக்கிறார்கள் சீனு தேசத்தை எடுத்துப் பார்ப்போம். அவர்களிடையேயும் சாதிப்பாகுபாடு உண்டு. மலேயா தேசத்தையெடுத்துப் பார்ப்போம் இங்கு அரச குடும்பத்தவர்கள், இன்னும் இரண்டொரு பிரிவுகளும் உண்டு மற்றவர்கள் எல்லாம் சாதாரண மக்களாகவே கருதப்பட்டு வருகிறார்கள் இந்தியாவைப் பார்ப்போம் அங்கும், பிராமணர்கள், வெள்ளாளர்கள், செட்டிமார்கள், நாடார்மார்கள் இப்படியே காட்டிக்கொண்டு போகலாம். ஆனால், இச்சிரமம் தேவையில்லை. டச்சுக்காரர்களில் எத்தனை பிரிவுண்டோ யானறியேன். ஆனால், அவர்கள் இலங்குவில் சாதாரண பறங்கியருடன் உறவாடுவது குறைவு.

Illustrated weekly of India dated July 11. 1971 states as follows.

Sir,

Regarding Abdul Alis' letter on "Mohamed and the Quran" (June, 6) it is not only in Hindu Society that there are divisions of caste. Among the Muslims too, fierce quarrels between the Shias and the Sunnis are only too well known. Hence to say that there is no class or caste distinction in Islam is to lend countenance to a colourful myth at the cost of reality.

— *by K. C. Sen.*

இலங்கைச் சிங்கள பௌத்தர்களிடையேயும் சாதிப்பாகுபாடு இருக்கத்தான் செய்கிறது. கொவியாஸ் (Goviyas), மீன்பிடிகாரர், பரவர், சுண்ணும் caste, ரொடியாஸ் இன்னும் பலர் இருக்கக்கூடும்

ஆதலால் நான் தமிழ் இந்துக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். அது யாதெனில் எப்படிப் புத்தபகவான், காந்திமகான், இராமகிருஷ்ணபகவான் சாதியையொழிக்கும் வகையில் தங்கள் பேச்சினால், எழுத்தினால், செயல்களினால் சாதியை ஒழிக்கத் திடசங்கற்பம் பூண்டு ஒரே சாதிதான் இருக்கிறதென்று போதித்தார்களோ அவ்வண்ணமே நாங்களும் அல்லும் பகலும் பாடுபட்டு வரவேண்டும்

இறைவன் படைக்கும்போது சாதியையும் படைத்ததாக நானறியேன். மனிதன்தான் சாதியென்ற புற்று நோயை உண்டாக்கியிருக்கிறான். இக்கொடிய நோய் சமுதாயத்தில் ஊடுருவி தேவையில்லாத் தொல்லைகளை உண்டாக்குகிறது. இறைவன் கண்ணில் எல்லா மனிதரும் ஒன்றுதான், உயர்வு, தாழ்வு என்னும் வித்தியாசம் கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் பொறுத்த மட்டில் இரு சோடி சாதிகள் உண்டு ஒன்று ஆண் சாதி, மற்றது பெண் சாதி; ஒளவைப்பிராட்டியார் கூறிய வண்ணம் சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால் நீதி தவருநெறி. உண்மையான மனிதன் சிந்தனையின் சிகரத்தையடைந்து, அதே சமயம் அவனுடைய இருதயத்துக்குள் அன்பு வேரூன்றி விட்டால் அவன் இப் படிப்பட்ட அற்ப விஷயங்களில் ஈடுபாடு கொள்ளமாட்டான்

---

# மொழிப் பிரச்சனைகள்

இன்று இலங்கையில் பிரதானமாக இரு மொழிகள் உபயோகிக்கப் பட்டு வருகிறது. மூன்ருவதாக, ஆங்கிலமும் சிலர் பாவித்து வருகின்றனர். எங்களை எதிர்நோக்கும் ஒவ்வொரு பிரச்சனைகளையும் சமாதான மாகத் திர்வுகாண வேண்டும்.

இன்று சிங்கள மொழி அரசாங்க மொழியாக பாவித்து வரப்படுகிறது இதன் விளைவினுல் சிங்களவர்கள் மாத்திரமல்ல, சிங்கள நாட்டிலே உத்தியோகம் பார்க்கும் அனைவரும் சிங்களமொழி தெரிந்திருக்க வேண்டும். இதற்கு முன்னர் ஆங்கில மொழியே அரசகரும மொழியாக விருந்து வந்தது.

ஏன் சிங்களம் படிக்க வேண்டும்? அரச கருமமொழியாக விருப்பதால் சிங்களப் பகுதியிலே உத்தியோகம் பார்ப்பவர்கள் இம்மொழியைப் பேசவும், எழுதவும், வாசிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். வியாபாரிகள் சிங்களம் பேசத் தெரிந்தால் போதும்! எனினும் வாசிக்கவும், எழுதவும் தெரிந்தால் இன்னும் விசேஷம்.

ஆனுல், அங்கு வாழும் சிங்கள மொழியைப் படிக்கக்கூடிய ஆற்றல் இல்லாதவர்களுக்கு அவர்கள் தங்கள் சுயமொழியிலே காரியங்களைப் பார்ப்பதற்கு ஆங்கிலேயர் கையாண்ட வழியை இங்கு கையாளலாம். இதில் ஒரு சிரமமும் இருக்கமாட்டாது

கடந்த முப்பது வருடகாலமாக தமிழ்த்தலைவர்கள், தமிழ் மக்கள் விருப்பத்திற்கிணங்க, தமிழர் வாழும் பிராந்தியத்தில் அதாவது வட, கிழக்கு மாகாணங்களில் தமிழ்மொழிக்கும் இப்பகுதிகளில் அரச அந்தஸ்து வழங்க வேண்டுமென்று பாராளுமன்றத்திலும், வெளியிலேயும் வாதாடிப் போராடி வந்தார்கள். ஆனுல், இதுவரை கிடைத்தது ஒன்றுமில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள அரசியல் பிரதமர் பண்டாரநாயக்கா, பண்டா — செல்வா ஒப்பந்தமொன்று கைச்சாத்திட்டு, அமுலுக்குக் கொண்டுவரமுன் சிங்கள அரசியல்வாதிகளிற் சிலரும், பௌத்த பிக்குகளும், சில இயக்கங்களைச் சேர்ந்தவர்களும், சில சிங்களப் பொதுமக்களும் இவ்வொப்பந்தத்திற்குத் தீவிர எதிர்ப்பைக் கண்டனக் கூட்டங்கள் மூலம் பிரதமருக்குத் தெரிவித்தார்கள் ! இதன் விளைவாகப் பண்டா — செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது.

பின்னர், டட்லி பிரதமராக வந்தபோது, டட்லி — செல்வா ஒப்பந்தம் பரம இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. சிங்களவர்கள் எதிர்ப்பார்கள் என்ற பயத்திலோ, என்னவோ இதுவும் அமுல்படுத்தப்படவில்லை

இதன் பின்னர் தமிழ்த் தலைவர்கள் சிறீமாவோ அம்மையார் பிரதமராகவிருந்தபொழுது, கடைசிப் பட்சத்தில் ஆறு அம்சக் கோரிக்கையைச் சமர்ப்பித்தனர். ஆனால், அம்மையார் வெறும் ஊமையாகவே இருந்துவிட்டார். இறுதியில் பாராளுமன்றம் கலைக்க முன்னர் (அப்போது செல்வநாயகம் உயிரோடிருந்தார்) சிறீலங்கா — தமிழர் விடுதலைக் கூட்டணியார் இரு சாராருக்குமிடையே மொழி, நிலப் பிரச்சனைகள் பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றது ஆனால், இதுவும் புஸ்வாணமாகியது.

இப்பிரச்சனையை இம்முறையாகுதல் இரு சாராரும் முன்வந்து சுமுகமாகத் தீர்க்க வேண்டும். மிகச் சுலபமான வழியுண்டு. எப்படி? தமிழ் தாயகத்தில் சிங்களக் குடியேற்றத்துக்கு முற்றுப்புள்ளி போட வேண்டும் இரண்டாவதாக, தமிழ் மொழி, தமிழ்ப் பிராந்தியத்தில் அரசகரும மொழியாக அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்.

ஆங்கிலம், இன்று ஓர் உலக மொழியாகக் கருதப்பட்டு வருவதால், இதனையும் விரும்பியோர் கற்றறிந்து இருப்பது நல்லம். குறிப்பாக, விஞ்ஞானத்தில் சுயமொழியில் தேர்ச்சி பெற்றிருப்பவர்கள் ஆங்கிலத்தை நன்கு தெரிந்திருப்பதன் மூலம் இத்துறையிலே மேலும் முன்னேற்றங் காண்பார். பொதுவாக இன்று உலகில் பல பாகங்களில் பலவிதமான சம்பவங்கள் நாளுக்கு நாள் நடைபெறுகிறது இதனை ஆங்கிலம் தெரிந்தவர்கள் ஆங்கிலப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் மூலம் உடனுக்குடன் அறிந்திருக்கலாம்.

இன்றைக்கு ஆங்கிலம் தெரியாத நாடுகளிலும் ஆங்கிலம் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகிறது H. G. Wells என்ற ஒரு பிரபல்யம் பெற்ற ஆங்கில எழுத்தாளர் கூறினார், "English will become the Uuiversal Language". ஆங்கிலம் திணிக்கப்படாமலே அதனை அநேகர் சுயமாகப் படிப்பார்கள். இவ்வுண்மை போகப் போகப் புலப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளங்கீரன், "இலங்கையின் இரு மொழிகள்" என்ற நூலில் 47-ம் பக்கத்தில் குறிப்பிடுவதாவது. "சிங்களம் இந்நாட்டின் தேசிய மொழிகளில் ஒன்று. இந்நாட்டின் பெரும்பான்மை மக்கள் பேசும் மொழியாகும். எனவே, இதுவரை ஆங்கில மொழியினால் பின் தள்ளப்பட்டு, தேசிய அந்தஸ்தை இழந்து. வளர்ச்சியடைய முடியாது தேங்கியிருந்த சிங்களம் அடிமைத் தளையை அறுத்தெறிந்துவிட்டு, மீண்டும் தேசிய அந்தஸ்தைப் பெற்று அரியாசனம் ஏறியதைக் குறித்து மகிழ்ச்சியடைய வேண்டும் தேசாபிமானம் மிக்கவர்கள் மகிழ்ச்சியடையவும் செய்கிறார்கள் இம்மொழியின் அரசியல் அந்தஸ்தைப் பற்றி இந்நாட்டு மக்கள் மத்தியில் கருத்துவேறுபாடில்லை; இருக்கவும் முடியாது. சிறப்பாகத் தமிழ் மக்கள்கூட இதை ஆட்சேபிக்கவில்லை. ஆனால், சிங்களம் மட்டுமல்ல; தமிழும் அரசியல் மொழியாக வேண்டுமென்பதுதான் தமிழ் மக்களின் கோரிக்கையாகும். இதில்தான் பிரச்சனை தோன்றுகிறது"

"ஒரு சுதந்திர ஜனநாயக நாட்டில் சிறுபான்மை மக்களின் மொழியுரிமை மறுக்கப்படுவது ஜனநாயக அரசியலின் அமைப்புக்கே — அதன் அஸ்திவாரத்துக்கே வெடி வைப்பதாகும். எனவே, இப்போதைய அரசாங்கம், ஒரு ஜனநாயக அரசாங்கம் என்பது உண்மையானால், தமிழ் மக்களின் மொழியுரிமையை அங்கீகரிப்பதன் மூலமாக ஜனநாயக அரசியலைக் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கிறது"

---

# விஞ்ஞானம்

மெய்ஞ்ஞானிகள் அன்று கூறியவற்றை இன்று விஞ்ஞானிகள் ஒவ்வொன்றாக நிரூபித்து வருகிறார்கள். விஞ்ஞானிகள், விஞ்ஞான ரீதியிலே எத்தனையோ உண்மைகளைப் பரிசோதனை செய்து கண்டுபிடித்து வருகின்றனர்.

விஞ்ஞானியின் ஆராய்ச்சி காரணமாக எத்தனையோ பெருஞ் சாதனைகளை நிலைநாட்டியுள்ளார்கள். பல நன்மையான காரியங்களையும் புரிந்துள்ளார்கள்; அதே சமயத்தில் சில தீமைகள் விளையக்கூடிய செயல்களையும் புரிந்துள்ளார்கள்.

இதனால், விஞ்ஞான ரீதியில் முழுக்க முழுக்க முன்னேறிக் கொண்டு போகிறோமென்று கூறுவதற்கில்லை. ஏனெனில், இன்றைக்கு வல்லரசு நாடுகள் போருக்குரிய ஆயுதங்களையும், பல்வேறுபட்ட சண்டைக் கப்பல்கள், ஆகாயவிமானங்கள், வெடிகுண்டுகள், அணுகுண்டுகள், ஜல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயுக் குண்டுகள், யுத்த பீரங்கிகள், இன்னும் இவ்வாறு அழிவுக்குரியனவற்றையும் கண்டுபிடித்துள்ளார்கள்.

இரண்டாவது யுத்தத்தில் அமெரிக்க விமானிகள் இரக்கமற்ற முறையில் ஜப்பானிய நகரங்களாகிய ஹிரோசிமா (Hiroshima) மற்றும் நாகாசாக்கி (Nagasaki) யில் அணுகுண்டைப் போட்டனர் இப்பாதகச் செயலாலே, இவ்விரு நகரங்களிலும் அநேகர் மாண்டனர்; பெரும்பாலோர் பெருங் காயங்களுக்கு ஆட்பட்டார்கள். இதன் விளைவாகக் காயம் அடைந்தோரில் ஒரு குறிப்பிட்ட தொகையினர் வலது குறைந்தவர்களாகவே வாழ்ந்து வருகிறார்கள்.

யுத்தங்களில் எத்தனை பேர் உயிர்ப் பலியாகின்றனர்? இன்னும், எத்தனையெத்தனை பேர் அங்கங் குறைந்தவர்களாகக் காலத்தைக் கழித்து வருகிறார்கள். இதுவரை விஞ்ஞான மூலம் கண்டுபிடித்த ஆராய்ச்சி காரணமாக எவ்வளவு நாசகார வேலைகளைப் புரிந்துள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது.

அடுத்து விஞ்ஞானம் செய்துள்ள நல்லவை பலவற்றையும் எடுத்துக் கூற விரும்புகிறேன். வைத்தியத்துறையில் இன்று எத்தனையோ நம்பமுடியாதளவிற்குப் புது மருந்துகள் கண்டுபிடித்து நோய்களை மாற்றி வருகிறார்கள், அல்லது குணப்படுத்தி வருகிறார்கள். இன்று மனோவியாதியால் கஷ்டப்படுபவர்கட்கும் மனோவைத்தியர் பரிசோதனை செய்த பின்னர் அதற்கேற்பக் குளிகைகளைக் கொடுத்து வருகிறார்கள் நரம்பு வியாதியில் அல்லற்படுகிறவர்களுக்கும் நரம்புச் சிகிச்சையாளர்கள் தக்க வைத்தியம் செய்து வருகிறார்கள். சில வியாதியஸ்தர்களுக்குச் சத்திர சிகிச்சை செய்யப்பட்டு வருகிறது இதனால், அநேகர் குணமடைந்து சாதாரண வாழ்க்கையை வாழக்கூடியதாகவிருக்கிறார்கள்.

இன்று, இரு சக்கர வண்டிகள், மோட்டார் வண்டிகள், பயணக் கப்பல்கள், பயண ஆகாய விமானங்கள் இருப்பதால், ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்குச் செல்ல, ஒரு நாட்டிலிருந்து இன்னோர் வெளி நாட்டிற்குச் செல்வதும் சுலபமாகிக்கொண்டு வருகிறது. பண்டைய காலத்திலே ஓரிடத்திலிருந்து இன்னுமொரு இடத்திற்குக் கால்நடையாகவே தரையில் சென்றனர். ஆனால், கடல் கடக்கச் சின்ன வள்ளங்கள் மூலம் பயணம் சென்றனர்.

தூர தேசத்திற்கோ அல்லது உள்ளூரிற்குள்ளேயோ அறிவித்தல், தந்தி மூலம் அறிவிக்கலாம். மற்றது தொலைபேசி மூலம் நேரிடையாகத் தேவையானவரிடம் கதைக்கலாம் அல்லது செய்தி சொல்லலாம். கம்பியில்லாத் தந்தி மூலமும் பேசிக்கொள்ளலாம். ஒலிபெருக்கி மூலம் ஒரு மாபெரும் வெள்ளக் கூட்டத்தின் மத்தியிலே நின்று சொற்பொழிவாற்றினால், எவ்வளவு தூரத்திலிருப்பவர்களுக்கும் தெளிவாகக் கேட்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரேடியோ மூலம் உலகின் பல பாகங்களிலிருந்து புதினங்கள், செய்திகள், அரசியல் பேச்சுக்கள், இலக்கிய விஷயங்கள், சமயவுரைகள் மற்றும் சங்கீதக் கச்சேரிகள் இன்னும் பற்பல விடயங்கள் கேட்கலாம் இன்று புதிய கண்டுபிடிப்பான டெலிவிஷன் (Television) மூலம் நேரடியாக எல்லாம் பார்க்கலாம் டேப் ரெக்கோடர் மூலம் ஒருவர் ஆற்றும் சொற்பொழிவையோ, பக்திப் பாடல்களையோ, சாதாரண பாடல்களையோ நேரில் கேட்குமாப்போல் இருக்கும்.

இன்று மின்சாரம் மூலம் வேலை செய்யும் காத்தாடிகள் வெப்பமான காலத்திலே கந்தோர்களிலும், வீடுகளிலும் பாவிக்கப்பட்டு வருகிறது. மனிதனுக்கு எவ்வளவோ ஆறுதலையளிக்கின்றது. மின்சாரம் மூலம் குளிர்ப்பானங்களை வைக்கக்கூடிய குளிர்ப்பெட்டி உண்டு. மின்சார வெளிச்சம் எத்தனையோ இடங்களில் உபயோகித்து வருகின்றனர். மின்சாரம் மூலம் சில நோய்வாய்ப்பட்டவர்களுக்குச் சிகிச்சையளித்து வரப்படுகிறது. மின்சார இரும்புப் பெட்டி மூலம் துணிகளை அழுத்தி வடிவாகப் போடக்கூடியதாகச் செய்யலாம்.

அச்சகங்களில் மின்சார மூலம் எத்தனையோ ஆயிரமாயிரம் புத்தகங்களை அச்சிட்டு வெளியிடுகிறார்கள். நல்லறிவுப் புத்தகங்களை வாசிப்பதால் அறிவு வளர்ச்சியடைகிறது அறிவு வளர்ச்சியடைந்தால் எல்லா விடயங்களும் துலாம்பரமாக விளங்குவன.

இன்று கைக்கடிகாரங்கள் மற்றும் சுவரில் மாட்டும் பெரிய கடிகாரங்களும் வெவ்வேறு நாடுகளிலே செய்யப்பட்டுப் பாவனைக்கு இங்கு வருகிறது. சரியான நேரத்தைப் பார்ப்பதற்கு அதிக முக்கியமாகவிருப்பது இக்கடிகாரங்கள்.

இன்று விஞ்ஞானம் முன்னேற்றம் அடைந்த நிலையை நினைக்க மிக விசித்திரமாகவிருக்கிறது, ஓரளவு நம்பமுடியாமலேயிருக்கிறது.

Space-craft மூலம் சந்திர மண்டலத்தையும், செவ்வாய் மண்டலத்தையும் கண்டுள்ளார்கள். இனி வெவ்வேறு மண்டலங்களிற்குப் போக எத்தனிப்பார்கள். இது சாத்தியமாகலாம். ஆனால், அம்மண்டலங்களில் வசிக்க முடியுமா இல்லையா என்பது ஒரு கேள்விக்கு இடமாகும்

இறுதியாக விஞ்ஞானம் நல்வழியில் உபயோகப்படுத்தினுல் உலகிற்கு நன்மை பயக்கும். அல்லது தீய வழிகளிலே விஞ்ஞானம் உபயோகப்படுத்தப்படுமானுல் உயிரினங்களுக்கு அழிவு ஏற்படும். இதனை மக்கள் விரும்பமாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்புள்ள வாழ்க்கை

இன்று, எங்கும் பிரசித்தி பெற்ற பண்பாடு யாதெனில், பெரும் பணக்காரர்கள் மத்தியில் பெரிய பங்களா ஒன்று கட்டுவது. சுற்றி வரப் பூஞ்செடிகள் நடப்பட்டிருக்கும், தண்ணீர் ரப்பர்க் குழாய் மூலமாக இச்செடிகளுக்குப் பாய்ச்சப்படும் ஏழைகள் போய்ப் பிச்சை கேட்டால் அடித்துத் துரத்திவிடுவார்கள்! ஒரு புதுமாதிரிக் கார் வாங்கி மின்னல் வேகத்தில் ஓட்டிச் செல்வார்கள். அதில் ஒரு குஷி காண்கிறார்கள். தனது வயது வந்த பெண் மக்களை உயர்ந்த உத்தியோகத்தனுக்கோ அல்லது இளம் பெரும் வியாபாரிக்கோ பெருஞ் சீதனத்தைக் கொடுத்துத் திருமணம் செய்து வைப்பார்கள்!

பண்டைய காலத்து மக்கள் அன்பும், அறமும் என்ற அடிப்படையில் உத்தமமான, உன்னத வாழ்க்கையை வாழ்ந்து வந்தார்கள். இதனால், வாழ்வு செழுமை மிக்கதாகவிருந்து வந்தது. யாருக்கும், ஒரு விதமான குறையோ, கஷ்டமோ இல்லை. இனசனம்; சுற்றத்தவர்கள் நண்பர்கள், மற்றும் முன்பின் பழக்கமில்லாதவர்கள், எல்லோருமே இந்த இரண்டு கூற்றின் காரணமாக ஒருவரோடொருவர் இன்சொல் உபயோகித்து இன்புற்று வாழ்ந்து வந்தார்கள்.

அவர்கள் நல்ல போஷாக்குள்ள உணவை உண்டு வந்தார்கள். அதற்கேற்ப நல்ல வேலையும் செய்து வந்தார்கள். இதன் காரணமாக உடல் வலிமை பெற்றிருந்தனர். அவர்களுக்கிடையே அன்பும், அறமும் ஓங்கியிருந்தமையாலும், கோயில் வழிபாடும் சேர்ந்து இருந்தமையாலும், மனோவலிமையும் குறைவிலாது பெற்றிருந்தனர். அக்காலங்களிலே தூர பயணம் நடந்து சென்றிருந்தார்கள் வள்ளங்கள் மூலம் கடலைத் தாண்டிச் சென்றிருந்தார்கள். கடவுள் நம்பிக்கையும் அவர்களிடம் சிறந்து விளங்கின. இதன் காரணங்களால், அவர்கள் உள்ளங்களும் தூய்மை பெற்றிருந்தன.

இன்று காரியங்கள் எல்லாம் முரண்பாடாக நடந்து வருகிறது. அன்பும் அறமும், ஒரு வெறும் சிலராலே கைப்பற்றப்பட்டு வருகிறதேயொழிய, பெரும்பாலோர் "பணத்தையே வழிபாடு" செய்து வருகிறார்கள். இதனால்போலும், இறைவனும் தன் அந்தஸ்தையிழந்து அவனும் மறைந்து விட்டான்!

செல்வம் செலவுக்குத் தேவைதான். வறுமையில் வாடுபவனைப் பார்க்கும்போது எங்கள் அங்க மயிர்களெல்லாம் கூச்செறிகிறது. காட்டில் ஒரு வறியவன் வாழ்கிறான் என்றாலே பெரிய ஞானிகளுக்கும், கவிஞர்களுக்கும், படித்தவர்களுக்கும் மெய் சிலிர்க்கும். ஆகையினால்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவள்ளுவரின் திருக்குறள் கூறுகிறது என்னவெனில், "பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை, அருளில்லார்க்கு அவ்வுலகில்லை" உண்மைதான்! ஆனால் தேவைக்கு மிதமிஞ்சிய பணத்தை வைத்து வழிபடுவோர்களை நினைக்கும் பொழுது எனக்கு உண்மையில் என்ன சொல்வதென்றே தெரியவில்லை! ஓரளவு தர்மம், இரக்க குணத்தினால், செய்வார்களாயின் அவர்களுக்கும் பெறுபேறாகப் புண்ணியமும் கிடைக்கும். ஆனால், யாழ்ப்பாணத்துப் பெரும் பணக்காரர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு "நான் மிகவும் இரக்கம் காட்டியவனாகவேயிருந்து வருகிறேன்."

வாசிப்பவர்களில் அநேகர் என்னைக் கேட்கலாம், நீர் ஏன் இவர்களுக்கு இரக்கம் காட்ட வேண்டுமென்று கருதுகிறீர்கள். ஆம்! நான் தக்க பதில் அளித்தே தீரவேண்டும் உலகச் சரித்திரத்திலே "ஆத்மீக வாழ்வின்" சிகரத்தையடைந்த புத்தபெருமான், ஓர் அரச குடும்பத்திலே பிறந்து. வளர்ந்து, திருமணம் புரிந்து ஒரு செல்வக் குழந்தைக்கும் தகப்பனாகியவர், சிறந்த வாழ்க்கையை வாழ்ந்தவர், எல்லாவற்றையும் விட்டெறிந்து வாழ்வின் உண்மையான நோக்கத்தைக் கண்டு பிடித்துச் சச்சிதானந்த நிலையையடைந்தார். செல்வத்தைத் துச்சமென மதித்தார். பின்னர், ஒரு மாட்டுத் தொழுவத்திலே ஏசு கிறீஸ்துநாதர் பிறந்தார். அவர் பிறக்கும்போதே மாபெரும் ஞானியாகப் பிறந்தார். ஓர் இடத்தில் பணத்தைப் பற்றிக் கூறும்பொழுது என்ன சொன்னார் என்பதை நாங்கள் ஒவ்வொருவரும் அவதானிக்க வேண்டும். "It is easier for a camel to enter the eye of a needle than for a rich man to enter into the Kingdom of Heaven." அதாவது, அவர் கூறியது யாதெனில், "ஓர் ஊசியின் கண்ணுக்குள்ளால் ஓர் ஒட்டகம் செல்லுவது சுலபமாம். ஆனால், ஒரு பணக்காரன் மோட்ச சாம்ராஜ்ஜியத்தை அடைவது மிகக் கடினம்" என உரைத்துள்ளார். அவர் மேலும் கூறியது அல்லது செயல் மூலம் காட்டியது யாதெனில், ஒரு கள்ளன், ஒரு விபச்சாரி இவர்கள் இருவர்களுக்கும் சிலுவையில் ஆணியால் அறைந்து தொங்கவிட்டபொழுது. இரு கள்வர்களும் அக்கமும், பக்கமும் இவரைப் போலவே தண்டிக்கப்பட்டார்கள். அப்பொழுது ஒரு கள்வன் யேசுநாதரைப் பார்த்துக் கூறினான்: "Think of me when you are in Heaven." அதற்கு அவர் அவனுக்கு இணக்கம் தெரிவித்தார். மற்றவர் இராமகிருஷ்ண பரமஹம்சர். அவர் பணத்தைக் கண்டால் அஞ்சுபவர். எங்களில் சிலர் பேய்க்கு அஞ்சுவதுபோல்தான்!

இந்த வாழ்க்கையைப் பார்த்து முடியாதவர்களும் ஆசைப்படுவார்கள். இதுவல்ல வாழ்க்கையின் நோக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனக்கலவரம்

இனக்கலவரங்கள் இலங்கையில் மாத்திரம் கோரத்தாண்டவமாடுகின்றது என்று எண்ணிவிடலாகாது. எந்தத் தேசங்களில் இரண்டோ மூன்று இனங்கள் வாழ்ந்து வருகின்றனவோ அங்கே சிற்சில சமயங்களில் இனக்கலவரங்கள் ஏற்படுவது உண்டு. உதாரணமாக அமெரிக்க நாட்டை எடுப்போம் அங்கே வெள்ளையர்களுக்கும் கறுத்தவர்களுக்கு மிடையே கலவரங்கள் நடப்பதைப் பத்திரிகை மூலமாகவும், மற்றும் வானொலி மூலமாகவும் அறியத்தக்கதாகவிருக்கிறது. இதேபோன்று இங்கிலாந்திலேயும் இதே பிரச்சனை காலத்துக்குக் காலம் ஏற்படுகிறது. மற்றும் இந்தியாவிலும் பாகிஸ்தானியர்களுக்கும், இந்தியர்களுக்கு மிடையே கலவரங்கள் நடந்ததுண்டு மலேயா தேசத்திலும் சில வருடங்களுக்கு முன்னர் மலாய்க்காரர்களுக்கும், சீனர்களுக்குமிடையே வெட்டுப் போர் நடந்தது.

இப்பேர்ப்பட்ட பிரச்சனைகள் ஏற்படாது பாதுகாப்பதுக்கு ஒரே வழி நல்ல பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு வாழ்வதேயாகும். அதிகமாகக் கம்யூனிஸ்ட் தேசங்களில் இப்படிப்பட்ட பிரச்சனை இருப்பதாகத் தெரியவில்லை! அதற்காக, இலங்கை கம்யூனிஸ்ட் நாடாக மாற வேண்டுமென்ற கருத்தைக் கூறவில்லை. ஜனநாயக நாடுகளிலே இந்நிலை உருவாக வேண்டும்.

*1915*-ம் ஆண்டில் சிங்களவர்கட்கும். முஸ்லீம்களுக்குமிடையே ஒரு பெருங் கலவரம் ஏற்பட்டது. அக்கலவரம் காரணமாக இரு பகுதியினர்க்குமிடையே மாண்டவர்கள் அநேகர் பொருள் நஷ்டப்பட்டவர்கள் அநேகர் இதன் விளைவினால் அநேக சிங்களத் தலைவர்களை அந்நிய அரசியலான ஆங்கிலேயன் சிறைச்சாலைக்கு அனுப்பி வைத்தான். பின்னர் உலக முதலாவது யுத்தம் நடந்துகொண்டிருக்கும் நேரத்திலே சிங்களப் பெருந் தலைவர்களைச் சிறையிலிருந்து விடுதலை செய்வதற்காகச் சார், பொன்னம்பலம் இராமநாதன் இங்கிலாந்து சென்று வாதாடினார். இவருடைய வாதத் திறமையைப் பார்த்து ஆங்கிலேயரே வியப்புற்று, சிறையிலிருக்கும் சிங்களத் தலைவர்களை விடுதலை செய்யும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்டது. இதன் பின்னர் கலவரங்கள் நீங்கிச் சமாதானம் நிலவியது.

*1956*-ல் சிங்களமே அரசியல் மொழியென்ற சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தனர். இதன் விளைவாகத் தமிழ் அரசுக் கட்சி காலி மைதானத்திலே சத்தியாக்கிரகம் செய்தனர். இவர்களோடு வேறு சில தமிழர்களும் இருந்தனர் திடீரெனச் சிங்கள இனவெறி பிடித்தவர்களும், சில காடையர்களும் இவர்களைத் தாக்கத் தொடங்கினர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. அ. அமிர்தலிங்கத்துக்குக் கல்வீச்சின் காரணமாக நெற்றியில் காயம் ஏற்பட்டது. வேறு சிலர் அடிகள் காரணமாகக் காயப்பட்டார்கள். இக்கலவரத்தின்போது, நான் கொழும்பில், கொள்ளுப்பிட்டியில் தங்கியிருந்தேன். தேநீர் அருந்துவதற்காக ஒரு கடையொன்றுக்குப் போய் அருந்திவிட்டு எனது அறைக்குத் திரும்புகையில், நிரையாப்பிரகாரமாக பஸ்ஸிலிருந்து ஒவ்வொரு தமிழராகப் பார்த்து இறக்கி நல்ல அடியும், உதையும் கொடுத்தார்கள். என்னுடைய நல்ல காலத்திற்கு, ஒன்றிலும் சிக்குப்படாமல் தப்பிவிட்டேன். இது இறைவன் என்னைக் காத்ததாகவே கூறுவேன். இப்படி எத்தனையோ பொதுமக்கள், அதாவது தமிழ் மக்கள் அடிக்கும், உதைக்கும் ஆளானார்கள்.

பின்னர் 1958-ம் ஆண்டு ஒரு பெரிய இனக்கலவரம் திடீரென ஆரம்பித்தது. இவ்வேளையில் நான் கரடியனாறுப் பண்ணைக் கந்தோரில் கடமையாற்றி வந்தேன். ஆட்கள் மூலம் அறிந்த செய்தி நம்பத்தக்க வட்டாரத்தினரிடமிருந்து அறிந்தவற்றைக் கூறுகிறேன் : சிங்களப் பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்கள் பலர் இனத்துவேஷத்தின் காரணமாகச் சிங்கள வெறியர் பலராலும் வெட்டுக்கொத்துக்கு ஆளாகி உயிர்களை நீத்தனர். இன்னும் அநேகம் பேர் பலத்த காயத்துக்கு உட்பட்டதின் காரணமாகச் சிகிச்சை பெற்று உயிரைத் தப்பவைக்கும் நோக்கத்துடன் வைத்தியசாலைகளுக்கு விரைந்து கொண்டுபோகப்பட்டனர். இங்கு தப்பியவர்களும் உண்டு. மிகுதிப் பேர் மாய்ந்தவர்களும் உண்டு. ஈன இரக்கமின்றி எத்தனையோ தமிழ் மக்கள் கொலைக்காளானார்கள், இன்னும் பலர் உயிர் தப்பியபோதும் படுகாயங்கட்கு ஆட்பட்டனர். இதற்கிடையில் களவு, கற்பழிப்புச் சம்பவங்களும் நடைபெற்றது. பொலனறுவை, ஹிங்குராங்கோடை மற்றும் சில கிராமங்களிலிருந்தும் அகதிகள் பலர் மட்டக்களப்பு வந்து சேர்ந்தனர். அவர்களுக்கு அளிக்க வேண்டிய உதவிகளெல்லாம் அளித்தனர்.

பின்னர் இவர்களில் வெவ்வேறு இடங்களிலிருந்து வந்தவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கப்பட்டது. எத்தனையோ பேர் வேலையில்லாமல் திண்டாடினர். தெருத் தெருவாய் அலைந்தனர். உணவின்றி, உடையின்றி, இருக்க இடமின்றி வாடி வதங்கித் தாங்கொணுக் கவலைக்கும், கஷ்டத்திற்கும் ஆளாகினர். இக் கேடுகெட்ட நிலைக்கு விதிவசப்பட்டோரை நினைக்கையில், இன்றைக்கும் நெஞ்சம் உருகாதவர்கட்கும் உருகும்

இனி, அண்மையில் 1977-ம் ஆண்டு ஒரு புதுவிதமான முறையில், தேவையற்ற வழியில், இனக்கலவரம் ஏற்பட்டது. இதில் என்ன புதுமையென்றால், பொய் வதந்திகள் மூலம் சிங்கள மக்களின் மத்தியில் ஒரு துவேஷ மனப்பான்மையை உருவாக்கினர். இவ்வெறி நாடெங்கும் பரவலாயிற்று. இதன் விளைவாகத் தமிழர்க் கெதிரான வீண் பிரச்சா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரங்களைச் செய்து அவர்களைத் துன்புறுத்தினர். அவமானப்படுத்தப்பட்டனர். இம்முறை நாட்டின் பல பாகங்களில் கொலை, கொள்ளை, களவு, கற்பழிப்புகள், பெண்களை மானசீகப்படுத்தியமை. தமிழர்கள் கடைகளைத் தீக்கிரையாக்கி அநேக கடைகள் தரைமட்டமாக்கப்பட்டன. இவ்வளவு அக்கிரமங்களைச் செய்வதற்குக் காரணம் சிங்கள மக்கள், பெரும்பாலும் பண்பற்றவர்கள், வெகு விரைவில் உணர்ச்சி வசப்பட்டு, நிதானத்தையிழந்து வன்செயல்களுக்கும், கோரச் செயல்களுக்கும் இலக்காகியுள்ளார்கள்.

இத்தொடர்பில், ஈழநாடு 28-8-77-ல் "சுதந்திரக் கட்சியின் ஒரு பகுதியினரே நெருக்கடிக்குக் காரணம் என நிதியமைச்சர் சாடுகிறார்" என்ற தலையங்கத்தின் கீழ் அவர் கூறியுள்ளதை அப்படியே எழுதுகிறேன்: கொழும்பு, சனி இன்று நாட்டை எதிர்நோக்கியுள்ள நெருக்கடி நிலைமைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவினரே பொறுப்பாளர்களென்று நிதி அமைச்சர் திரு ஜெனி டி. மெல் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பு சேர். சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையில் அரசாங்க ஊழியர் சேமநல சங்கத்தின் தலைமை நிலையக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்ட குற்றச்சாட்டினைத் தெரிவித்தார். "இந்தக் குற்றச்சாட்டினை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கு நேராகவே சொல்லுகிறேன், யாழ்ப்பாணச் சம்பவம் ஒரு வகுப்புவாதக் கலவரமல்ல. அதனை வகுப்புக் கலவரமாக இவர்கள்தான் பொறுப்பாக இருந்தார்கள் என்று நம்புவதற்குப் போதிய ஆதாரங்கள் எம்மிடம் இருக்கின்றன" என்றார் அமைச்சர் "மக்களின் சடலங்களின்மீது பதவிக்கு வந்துவிடலாம் என்று அவர்கள் நினைத்திருக்கக்கூடும். ஆனால், அவர்கள் அரசாங்கத்துடன் தவறாக விளையாடுகிறார்கள்" என்று அமைச்சர் மேலும் கூறினார். அமைச்சர் மேலும் பேசுகையில், தோல்வி கண்ட அரசியல் சக்திகளின் வதந்திகளுக்குச் செவிமடுக்க வேண்டாம் என்றும், நாட்டின் அமைதியையும் ஒழுங்கையும் கூடிய விரைவில் ஏற்படுத்துவதற்கான சகல வழிகளிலும் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும்படியும் அரசாங்க ஊழியர்கள் சகலரையும் அவர் கேட்டுக்கொண்டார்.

மற்றது, ஈழநாடு 29-8-77-ல் 4-ம் பக்கத்தில் இத்தலையங்கத்தின் கீழ்க் குறிப்பிட்டுள்ளதையும் பொதுமக்கள் தெரிந்திருக்க வேண்டுமென்பதற்காக எழுதுகிறேன். கொழும்பு, ஞாயிறு "தனித் தமிழ் நாடு கோரிக்கையைச் சட்டத்தின் மூலம் தடை செய்ய வேண்டும்" என்று வண. மடிகே பன்னசீக மகாநாயக்கத்தேரோ பிரதம மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவை மகஜர் ஒன்றின் மூலம் கேட்டுள்ளார். இனிமேல் எவராவது பிரிவினைக் கோரிக்கை பற்றிப் பேசினாலோ, எழுத்து மூலம் தெரிவித்தாலோ, அவர்கள் மீது சட்டமூலம் நடவடிக்கை எடுக்க அரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயங்கக்கூடாது என்றும் இவர் தமது மகஜரில் கேட்டுள்ளார். அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :—

'பிரிவினைக் கோரிக்கையைச் சட்டத்தின் மூலம் தடை செய்வதாக இருக்கும் எனக் கருதலாம் ஆனால், இக்கோரிக்கை மனித உயிர்களைப் பறிக்கக்கூடிய விதத்தில் மேலும் பல சம்பவங்களைத் தோற்றுவிக்கலாம்

யாழ். குடா நாட்டிலும், வவுனியாவிலும் பெரிய குடியேற்றத் திட்டங்களை நிறுவி, அங்கு தமிழ் — சிங்கள — முஸ்லீம் மக்கள் குடியேற்றப் பட வேண்டும்'

25-8-77 ஈழநாடு 3-ம் பக்கத்தில் நாகதீப விகாராதிபதி அறிக்கை என்ற தலைப்பின் கீழ் வந்த செய்தியை அப்படியே குறிப்பிடுகிறேன். யாழ்ப்பாணம், ஞாயிறு. நயினாதீவு நாகதீப விகாரை பற்றிச் சிங்களப் பகுதியிற் பரப்பப்பட்ட வதந்திகளை மேற்படி விகாரையில் தலைமைக் குரு—வண. பண்டித பிரகாமனவத்த ஸ்ரீதர்மகீர்த்தி திஸ மகாநாயக் கத்தேரோ மறுத்துள்ளார். கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக நான் நயினாதீவு விகாரையில் வசித்து வருகின்றேன். இந்தக் காலங்களில் அப்பகுதியில் வாழும் தமிழ் மக்களுடன் நெருங்கிப் பழகி வந்துள்ளேன். எவராவது என்னைப் புண்படுத்தத்தக்கதாக நடந்துகொண்டது கிடையாது நாம் அனைவரும் அமைதியாகவும், சந்தோஷமாகவும் வாழ்வோமாகவென்று அறிக்கையொன்றில் மேற்படி நயினா நாகவிகாரைப் பிரதம குரு தெரிவித்துள்ளார்.

இலங்கையிலே இனக்கலவரங்கள் நடப்பதற்கு முக்கிய காரணம், பொய் வதந்திகள் பரம்புவதுதான். இத்தொடர்பில் யான் ஓர் உண்மையையும் கூறி வைக்க விரும்புகிறேன். அதாவது, சிங்கள மக்கள் பொதுவாக மிக நல்லவர்கள் ஆனால், அதே நேரத்தில் உணர்ச்சிவசப்படக்கூடிய மக்கள். முன்பின் யோசியாமல், சில பல பாவங்களைப் புரிகிறார்கள் ஏன் செய்கிறார்கள் என்பதே தெரியாமல் மோட்டுத்தனமாகச் செய்வார்கள். பின்னர் கவலைப்படுவார்கள்.

சிங்கள — தமிழர் ஒற்றுமை நிலவ இரு வழிகள் உண்டு. முதலாவது, புத்தகுருமார்கள் நகரத்திலும் சரி, நாட்டிலும் சரி, கிராமப் புறங்களிலும் சரி போய்ப் புத்தபெருமான் போதித்தவைகளையெல்லாம் சிங்கள மக்களுக்கு விளங்கக்கூடிய முறையில் போதிக்க வேண்டும். அதே போன்று இந்து மதத் தலைவர்கள் இந்து மதக் கொள்கையைச் சரியான முறையில் போதிக்க வேண்டும். சமய அடிப்படைக் கொள்கை மூலம் வாழ்வார்களானால் நன்மை உண்டு. இரண்டாவதாக, யான் குறிப்பிட விரும்புவது யாதெனில், வடக்குக் கிழக்குத் தமிழர்கள் தற்போதைக்கு மாநில சுயாட்சி கேட்க வேண்டுமேயொழிய, தனி நாடு, பிரிவினை வேண்டுமென்று அவசரப்படத் தேவையில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயம்

சின்னஞ் சிறு வயதிலே எனது அண்ணர் ஒன்று சொன்னது ஞாப கத்துக்கு வருகிறது. ஒரு சாதாரண மனிதன் ஒரு பேராசிரியரைப் (Professor) பார்த்துக் கேட்டாராம், தொழில்களிலே எது தலைசிறந்த தொழில்? அவர் கூறிய பதில், "விவசாயத் தொழிலே முதல் இடம் பெறும்." "உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம் யாம்" என்று பாரதியாரும் பாடியுள்ளார்.

ஆகையினால், விவசாயத்தின் பெரும் மதிப்பை நாங்கள் அங்கீகரிக்க வேண்டும். விவசாயத்தின் மூலமே மனிதர் தங்கள் உடல் நலனுக்குத் தேவையானவற்றைத் தேடிக்கொள்கிறார்கள். விவசாய வளர்ச்சியின் றேல் உலக வாழ்வில்லை

ஒரு நாடு செல்வம் கொழித்த நாடாகவிருந்தால் அதற்கு அர்த்தம் அந்நாட்டிலே விவசாயம் நன்றாக விளைந்திருக்கிறது என்பதாகும் நாட் டின் பொருளாதார வளர்ச்சிக்கு அல்லது சிறப்புக்குக் காரணமாக விருப்பது அந்நாட்டின் விவசாயம் ஓங்கி வளர்கின்றதேயாகும்.

முதலாவதாக, நெல் விளைச்சலையெடுப்போம். இன்று இலங்கையில் எத்தனையோ ஆயிரம் ஏக்கர்களில் நெல் விதைக்கப்பட்டு வருகிறது. வெவ்வேறு இன விதைகள் விதைக்கப்படுகின்றன. விதைத்த இடத்தில் போதிய உரமும், தேவையான தண்ணீரும் பக்குவத்துக்கேற்றபடியிருந் தால், நல்ல நெல் விளைவைக் காணலாம். In Sinhalese areas you get two crops — the Maha harvesting season and the Yala harvesting season respectivelv. உள்ளபடி மகாவலிகங்கை நீரைத் தேவை யான பாகங்களுக்குப் பாய்ச்சினால் இந்நாட்டில் போதிய அரிசி இருக் கும். வெளியூரிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமில்லை.

மரக்கறியைப் பொறுத்த மட்டில் இந்நாடு செல்வம் கொழித்த நாடென்று கூறலாம். அதிகமான இடங்களில் மரக்கறி நல்ல மலிவாக வாங்கலாம். சிங்கள ஊரில் வளரும் முட்டைக் கோவா, காரட்ஸ், பீற் றூட், லீக்ஸ் இன்னும் பற்பல மரக்கறி வகைகள் தமிழ்ப் பகுதிகளி லும், பிரதானமாக யாழ்ப்பாணக் குடா நாட்டிலும் நன்றாக விளைகின் றன.

நவதானியங்களும் போதியளவு உண்டு கடந்த அரசின் காலத்தில் மிளகாயும், வெண்காயமும், உருளைக் கிழங்கும் அதிசயிக்கக் கூடியள வில் விளைந்தன. இதனால் விவசாயிகள் அநேகர் செல்வந்தர்களாக மாறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் மூலம் நயம் பெற்றவர்கள் அநேகர் நல்ல வீடு வாசல்கள் கட்டி, சிலர் மோட்டார் வாகனமும், வானொலிகளும் வாங்கினர். ஒன்றுக்கும் வழியில்லாதவர்கள் வெகுவிரைவில் பணக்காரர்களாயினர். எத்தனையோ பேர் பெண் பிள்ளைகளுக்குச் சீதனம் கொடுத்து கலியாணங்களைச் செய்து வைத்தனர்.

அடுத்தபடியாக, இலங்கையில் பழவகை மரங்கள் பல உற்பத்தியாகி வருகின்றன. சிங்கள நாட்டிலே கூடுதலாக பழமரங்கள் விதம், விதமாகவிருக்கின்றன. ஏன் தமிழர் வாழ் மாகாணங்களிலும் பல வகையான பழமரங்கள் உண்டு. மாமரம் — மாம்பழம்; கொய்யா மரம் — கொய்யாப்பழம்; திராட்சைக் கொடி — திராட்சைப்பழம்; இலுப்பை மரம் — இலுப்பங் காய் — இலுப்பெண்ணெய்; வேப்பமரம் — வேப்பங்காய் — வேப்பெண்ணெய்; தென்னைமரம் — தேங்காய் — தேங்காயெண்ணெய்; பனைமரம் — பனங்காய் — புழுக்கொடியல், இப்படிப் பல் வேறு மரங்கள் மூலம் பழங்களை வாங்கிச் சாப்பிடத் தக்கதாகவிருக்கிறது.

விவசாயத்தைப் பின்தங்கிய இடங்களில் அதிகமாக உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் வங்கிகள் மூலம் போதிய நிதியுதவி கொடுத்துதவ வேண்டும். அதுமாத்திரமல்ல அவர்களுக்குத் தேவையானவற்றைப் பூர்த்தி செய்து உதவ அரசாங்கம் முன்வரவேண்டும். சில இடங்களில் போதிய தண்ணீர் வசதியில்லாமல் இருக்கக் கூடும் இப்படியான பெரும் பிரச்சனைகளுக்கு ஏழைப் பங்காளன் அரசாங்கத்தின் திட்டவட்டமான உதவியையே எதிர்பார்த்திருப்பான்.

என்னைப் பொறுத்த மட்டுக்கு இலங்கை வாழ் மக்கள் எல்லோரும் உத்தியோகம் பார்ப்பார்களென்று நான் எண்ணவில்லை. அதற்கேற்ற தகுதியுடையோர் உத்தியோக ஸ்தானத்தில் அங்கம் வகிக்கலாம். மற்றும் சிறு ஊதியம்பெற்று வாழ்பவர்களுக்கு நல்ல வாழ்வு அளிக்க வேண்டுமாகில் கூடியளவு மனிதருடைய சக்தியைப் பாவிக்க வேண்டுமேயொழிய யந்திர உபகரணங்கள் பாவிப்பதைக் குறைக்க வேண்டும் இதனால் எத்தனையோ தொழிலாளர்கள் தொழில் பார்க்கத் தக்கதாகவிருக்கும்.

எங்கெங்கு இயந்திரங்கள் பாவிக்க வேண்டிய அவசியமிருந்தால் அவற்றைப் பாவிப்பதில் குறை கூறுவதற்கில்லை. சீனாவில், எல்லோரும் ஏதோ ஒரு முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். அதே போல் இலங்கையிலும் நடைபெற வேண்டும். அப்போ வேலையில்லாப் பிரச்சனையும் தீர்ந்து விடும்!

விவசாயம் மேலும் பல வழிகளில் முன்னேறி வந்தால் நாடு செழுமை மிக்க நாடாக மாறிவிடும். ஒவ்வொரு குறிப்பிட்ட இடங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளில் விவசாயப்படை இருக்க வேண்டும். அப்படையினர் தங்களுக்குள்ளேயே ஒரு தலைவரைத் தெரிந்து அவர் மூலம் தங்கள் கஸ்ட நஷ்டங்களை அரசாங்கத்துக்கு உரைக்க வேண்டும். அப்போ எல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்வு காணப்படும்.

---

# எனது மலேயா வாழ்க்கை

நான் பிறந்தது, வளர்ந்தது, கற்றது கிள்ளானில். கிள்ளானிலிருந்து, கோலக்கிள்ளான் ஐந்து மைல் தூரமிருக்கும். இது ஒரு துறைமுகம் இவ்விடம் சிலாங்கூர் மாநிலத்தைச் சேர்ந்தது. இம்மாகாணத்தின் தலைநகர் கோலாலம்பூர். கிள்ளானிலிருந்து கிட்டத்தட்ட இருபத்துநான்கு மைல் தூரமிருக்கும்.

கோலாலம்பூர் தலைநகரத்தில் அதிகப்படியான யாழ். மக்கள் வதிந்து வந்தனர். கிள்ளானிலும், நியாயமான யாழ்ப்பாணத்தவர்கள் வசித்து வந்தார்கள். இவர்கள் எல்லோரும் உத்தியோகத்தர்கள்

என் தகப்பனார் ஒரு அப்போதிக்கரியாகக் கடமை பார்த்து வந்தார். வீட்டுக்கும், ஆஸ்பத்திரிக்கும் வெகுதூரமில்லை பிள்ளைப் பெறும் வார்ட் அண்மையில் இருந்தது. இன்னும் கொஞ்சம் தள்ளி கடும் மூளைச் சுகவீனர்கள் இரு அறைகள் கொண்ட கட்டடத்தில் வைக்கப்பட்டிருப்பார்கள். இதை விடத் தள்ளி பிரேதங்கள் வைக்கும் அறை ( Mortuary ) இருந்தது.

நான் இரவு நேரங்களில் அந்தப் பகுதிக்குக் கிட்ட இருக்கும் பாதையினூல் போக அஞ்சுபவன். பேயோ, பிசாசோ ஊசாடுகின்ற இடம் என்று எண்ணிக் கற்பனையின் காரணமாகப் பயப்படுவேன். ஒரு பராயம் வரும்வரை இப்பயம் என் மனத்தில் உறைவிடம் பெற்றது. சிறு வயதில் நான் மிகவும் குழப்படி செய்வது உண்டு. என் போன்ற வயதினர், இன்னும் குறைந்தவர்கள் எல்லோரும் மாலை நேரங்களில் உதைபந்தாட்டம் விளையாடுவோம். கிள்ளானில் சுப்பிரமணிய வித்தியாசாலை ( கோயில் அருகாமையில் ) என்னும் தமிழ்ப் பள்ளிக்கூடத்துக்குப் போய் வருவோம். படிப்பில் சாதாரணமாகவேயிருந்தேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு பெரிய ஆங்கிலப் பள்ளிக்கூடங்கள் உண்டு. அவற்றின் பெயர்கள் Anglo - Chinese School and High School. எனது ஏழாவது வயதிலே எனது நண்பர்களுடன் முதல் கூறப்பட்ட பள்ளி போய்த் திரும்புவது வழக்கமாகி வந்தது இப்பள்ளியில் படிப்பில் ஓரளவு திறமைசாலியாகத் திகழ்ந்தேன் இப்படியே எனது பதினோராம் வயது வரை படித்து வந்தேன். இந்நிலையில் இரண்டாவது உலக யுத்தம் தோன்றியது

ஜப்பானியருடைய தரைப்படை, விமானப்படை, கப்பற்படை இம் மூன்றும், ஆங்கிலேயப் படைகளை — அவுஸ்திரேலிய, இங்கிலாந்து, இந்தியப்படை — கடுமையாகத் தாக்கின. ஆங்கிலேயருடைய புகழ்பெற்ற இரு பெருங் கப்பல்கள் ஏச் எம் எஸ் றிப்பல்ஸ், ஏச் எம் எஸ். பிறின்ஸ் ஒப்வேல்ஸ் ஆகியவைமீது ஜப்பானிய ஆகாய விமானப்படைகள் குண்டுகள் பொழிந்தன. ஆனால் கப்பல்களை மூழ்கடிக்க முடியாது போயிற்று. ஈற்றில் ஆகாய விமானத்துடனேயே ஆகாய விமானிகள் கப்பல்களுடைய புகைபோக்கிக்குள்ளே இறங்கினர் மிகத் துணிகரமான செயலென்றே கூறவேண்டும். விமானங்கள் நொறுங்கின. விமானிகள் இறந்தனர். அவர்களுடைய எலும்புத் துண்டுகள் ஏதேன் மிஞ்சியிருக்குமோ தெரியவில்லை இந்நிலையில் கப்பல்கள் தாழத் தொடங்கின. தப்பக்கூடிய மாலுமிகள் எல்லோரும் தப்பினர். ஆனால் Captain கப்பலுடனே தங்கள் மானம் போனது எனக் கருதி அவர்கள் தங்கள் உயிர்களை நீத்தனர்.

எனக்கு நல்ல நினைவிருக்கிறது, வானொலி மூலம் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் அழுகுரலில் பேசினார். விம்மினார், அழுதார். ஒன்றுக்குமே கலங்காத இம்மகான் அன்று பேசுகையில் தளர்ந்து விட்டார்.

ஜப்பானிய தரைப்படையும், ஆகாயப்படையுமாகச் சேர்ந்து மின்னல் வேகத்தில் எதிரியின் படைகளை விரட்டியடித்து மூன்றுமாத எல்லைக்குள் மலாயாவைக் கைப்பற்றினர். வெள்ளையர் வெள்ளைக்கொடியைக் காட்டிச் சரண் அடைந்தனர். பின்னர் ஜப்பானிய இராணுவ ஆட்சி நிறுவப்பட்டது.

இவர்கள் ஆட்சியிலே நடந்த கொடூரத்தைக் கூறின் ஒரு புத்தகத்தையே எழுதி விடலாம். நான் அவர்களின் கொடிய ஆட்சியைப் பற்றிப் புத்தகம் எழுதப் போதிய தகமை போதாது ஜப்பானியர் மக்களைப் பய முறுத்தி ஈட்டியின் முனையிலே ஆட்சி புரிந்தார்களென்று சொன்னால் அது மிகையாகாது

எல்லோரும் நிப்பொன் மொழி கற்கவேண்டிய நிலை ஏற்பட்டது. நானும், மற்றவர்களைப் போல் இம்மொழியில் தேர்ச்சியடைந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலினால் ஜப்பானியப் பட்டாளக்காரருடன் இலகுவாகப் பேசக் கூடியதாகவிருந்தது.

பள்ளி செல்வதுண்டு. ஒவ்வொரு காலையும் ஓட்டப் பயிற்சி ஒரு கட்டாய பாடமாக இருந்து வந்தது இடையிடையே தோட்ட வேலையிலும் ஈடுபடுத்தினர். மற்றும் நேரங்களில் பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்படும்.

பின்னர் பென்சில் தொழிற்சாலையில் 1945-ல் வேலை பார்த்து வந்தேன். இதற்கு முன்னர்தான் 1944 பிற்பகுதியில் எனது தகப்பனாரும் வேறு சில அரசாங்க உத்தியோகத்தர் சிலர் ஆங்கிலேயருடைய புதினங்களைக் கள்ளத்தனமாக அறிந்த குற்றத்திற்காக கேட்டவர்கள் அனைவரும் சிறை வைக்கப்பட்டனர் சிறைவாசத்தின் கொடுமை பற்றி இங்கு குறிப்பிடாமலே மக்கள் அறிவர் இவர்களில் இருவர், மூன்று மாதங்களுக்குப் பின் விடுதலை செய்யப்பட்டார்கள். ஒருவர் எனது தகப்பனார். மற்றவர் எனது சித்தப்பா முறையானவர் ஏனென்றால் இவர்கள் புதினங்களை அறிந்தது உண்மை ஆனால் பரப்பவில்லை.

இக்காலத்திலேதான் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் அவருடைய பல அம்சங்கள் படைத்த சக்தியினால் இந்திய இராணுவப் படையைத் திரட்டிப் பெண் இராணுவப் படையும் இதில் கலந்து கொண்டனர். இந்திய நாட்டை ஆங்கில ஏகாதிபத்தியத்திலிருந்து, விடுதலையடைய ஜப்பானியருடன் சேர்ந்து இந்தியாவின் எல்லைகளுள் கடும்போர் புரிந்தனர். வீர முழக்கத்துடன்தான் கடும் போர் புரிந்து சில இடங்களில் வெற்றியும் ஈட்டினர் ஆனால் மாய்ந்தவர்கள் அநேகர் பின்னர் பின் வாங்க வேண்டிய கட்டம் ஏற்பட்டது ஆனால், இந்திய சரித்திரத்திலே இவர்கள் பின்வாங்க வேண்டிய நிலை ஏற்பட்ட போதிலும் இவர்கள் திறமையுடனும், மிகத் துணிவுடனும் போரிட்டதை உலகம் மறக்காது.

1945 ம் ஆண்டு அமெரிக்க விமானப் படை நாகாசாக்கி என்ற நகரிலும் ஹிரோசிமா என்ற நகரிலும் அணுகுண்டைப் போட்டனர். இதன் விளைவாக இவ்விரண்டு நகரங்களும் நாசமாக்கப்பட்டன எத்தனையோ பேர் மாண்டனர். எத்தனையோ பேர் காயமுற்றிருந்தனர். அநேகர் அங்கவீனப்பட்டனர். இப்பரிதாபக் காட்சியைக் கண்டு குண்டு போட்ட அமெரிக்க விமானிகள் பெரும் அதிர்ச்சியடைந்தார்கள், ஜப்பானிய அரசரே அதிர்ச்சிக்குள்ளாகி வெள்ளையரிடம் சரணடைந்தனர் மீண்டும் மலாய் நாட்டுக்கு ஆங்கிலேயரும் இந்தியப் படையினரும் வந்து நாட்டைக் கைப்பற்றினர், இதே நேரத்தில் Anti - Japanese force என்ற சீனப் படையினரும் தாங்கள் மறைந்திருந்த இடத்தை விட்டு வெளி வந்தனர். மலாய் நாட்டு மக்கள் அனைவரும் ஆனந்தப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜப்பானியர் தொடக்கத்தில் மலாயாவைக் கைப்பற்றிய பொழுது இச் சீனப்படை அவர்களுடன் போரிட்டு வந்தனர். இச் சீனப்படையினரின் எத்தனையோ தலைகள் சீவப்பட்டு கிள்ளான் நகரத்தின் மத்தியிலே மற்றப் பொது மக்கள் பார்க்கக் கூடியதாக தொங்கவிடப்பட்டன. என்ன கொடூரமான காட்சி! மற்ற நாட்டுப் போர்த் தலைவர்களுடைய வாள்களிலும் பார்க்க, ஜப்பானியரின் வாள் மிகச் சிறந்தது.

சிறையிலிருத்தப்பட்ட வெள்ளையர்கள் இந்தியர்கள் மற்றும் சாதாரண மக்களையும் கொடுமைப்படுத்திய ஜப்பானியர்கள் கடும் தண்டனைக்கு ஆளானார்கள், அநேகருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

இரண்டாவது யுத்தம் முடிவடைந்தது. பழையபடி மாணவ, மாணவிகள் தங்கள், தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பிச் செல்லத்தொடங்கினர். நாலு வருடங்கள் சரியான பள்ளிப் படிப்பில்லாமல் இளைஞர்களும், யுவதிகளும் இருந்தனர். 1945 ஆம் ஆண்டு நான் ஆறும் வகுப்பில் படித்து வந்தேன். பள்ளி முடிந்ததும் வீடு திரும்புவது வழக்கம். மாலை நேரங்களில் உதை பந்தாட்டமோ, பாட்மின்டனோ அல்லது டேபிள் டென்னிஸ் விளையாட்டில் பங்குபற்றுவது வழக்கமாகி விட்டது. மற்ற இளைஞரும் கலந்து கொள்வர்.

சோதனை காலங்களில் சோதனை நடக்கும்பொழுது மேற்பார்வையாளர்கள் எனக்குக் கிட்ட நெருங்கி நியாயமான நேரத்துக்கு நான் எழுதுவதைக் கூர்ந்து பார்ப்பார்கள் ஆனால் எனக்குக் காரணம் புலப்படவில்லை, பின்னர்தான் எனக்குச் சொன்னார்கள் உம்முடைய ஆங்கில எழுத்து மிக அழகாகவிருக்கிறது. அப்போதான் அவர்கள் பார்வையிட்டதன் காரணம் புலப்பட்டது. விளையாட்டுகளிலும் நான் ஓரளவு திறமைசாலியாகத்தான் காட்சியளித்தேன்.

மலாயா "தேனும் பாலும்" வழியும் நாடு என்று குறிப்பிட்டுள்ளதை யானறிவேன். வீட்டு மரக்கறி, மீன் மற்றும் சரக்குச் சாமான்கள் வாங்க அநேகமாக நான் போவது வழக்கம் மலாயாவிலுள்ள வியாபாரிகளில் ஒரு போற்றத்தக்க நல்ல குணமுண்டு அது என்னவென்றால், அவர்கள் கடும் நயத்தைக் கருதி ஒன்றையும் விற்பதில்லை. எல்லாரும் எந்தப் பொருளையும் எந்த முடக்கில் வைத்து விற்றாலும் ஒரே விலையாகத்தான் இருக்கும்.

பெரும் இலாபங்களைப் பெறவேண்டுமென்று எண்ணி எந்தப் பொருள்களையும் பதுக்கி வைத்து விற்கிற வாடிக்கை அவர்களிடம் கிடையாது. அவர்கள் பெருந்தன்மை படைத்தவர்கள். அப்படியிருந்தும் அவர்கள் பெரும் பணக்காரர்களாகவேயிருந்தார்கள். பின்னர்தான், இதற்குரிய காரணத்தைக் கண்டுபிடித்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபாரிகள் ஒன்று சேர்ந்து சங்கங்களை அமைப்பார்கள். இங்கே தான் அவர்கள் மக்களைப் பாதிக்காவண்ணம் குறைந்த ஆதாயத்திற்கு விற்க வேண்டுமென்று கருதி அப்படியே அவர்கள் செய்வார்கள் அதனால் பொது மக்களுக்கும், வியாபாரிகளுக்குமிடையே நல்லுறவும், நேச மனப்பான்மையும் ஏற்படுகிறது.

இந்நாட்டிலே பல்வேறு உலக மக்கள் வாழ்வதினால் இதனை Cosmopolitan country என்று கூறுவார்கள். இங்கே பல்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் இருப்பதினால், வெவ்வேறு விதமான சாப்பாட்டுக் கடைகள் உண்டு. விருப்பமானவர்கள் விரும்பிய சாப்பாட்டை ஓட்டல்களில் சாப்பிடலாம். சாப்பாடுகளின் உருசியை கூறவேண்டிய அவசியமில்லை. இது உலகோர் அறிந்த உண்மை.

ஒரு பழமொழி உண்டு. உலக இன்பங்களில் திருப்தியடைவதாயிருந்தால், ஓர் அமெரிக்க இல்லமும், ஒரு ஜப்பானிய மனைவியையும், சீனச் சாப்பாட்டையும் பெற்றிருக்க வேண்டும், இக்கூற்றை அநேகர் ஏற்றுக்கொள்கிறார்கள்.

இது ஒருபுறமிருக்க, திரும்பவும் வியாபாரிகளைப் பற்றி இரண்டொன்று கூறவேண்டியவனாகவிருக்கிறேன். பொதுவாகச் சீனர்கள் பள்ளிக்கூடக் கட்டடம் புதிதாகக் கட்ட வேண்டுமென்றால் பணத்தைப் புன்முறுவலுடன் வாரி வழங்குவார்கள். விளையாட்டு மைதானங்களுக்கும் உதவிபுரிவார்கள்.

கடைசியாக எனது தகப்பனார் இளைப்பாறினார். பின்னர் பங்குனி மாதம் பிறந்த நாட்டிற்குத் திரும்பினோம். கப்பல் மலாயாவை விட்டு நகர, நகர எனக்கு இரு கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தன. இன்பத்தையும், துன்பத்தையும் அந்நாட்டிலே அனுபவித்தோம்.

மீண்டும் ஒருக்கால் ஒரு சுற்றுப் பிரயாணத்திலே மலேயா போகக் கிடைத்தால் நான் செய்த தவப்பயனாகும்.

4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாத்மா காந்தி

நாசரேத்திலேயிருந்த யேசு கிறீஸ்துநாதருக்கும், இந்தியாவிலே யிருந்த மகாத்மா காந்திக்குமிடையே ஒருவிதமான ஒருமைப்பாடு இருந்தது. இருவரும் மிக ஆத்மீக வலிமை பெற்றவர்கள்.

இருவரும், சாதாரண மக்களின் நிலைமையை உயர்த்த வேண்டுமென்பதற்காக அரும்பாடுபட்டு வந்தனர். இருவரும், பொது மக்களுக்கு நன்மையையே போதித்து வந்தனரேயொழிய, தீமைகளைச் செய்யக்கூடாதெனக் கூறினர்.

யேசு கிறீஸ்து ஏழைகளுக்கும், எளிமை மிக்கவர்களுக்கும், கருசனையும், கருணையும் காட்டி வந்தார். அவ்வண்ணமே, காந்தி மகானும் செய்தார். ஏழைகளுக்காக அவர்கள் இருதயங்கள் உருகின. பணக்காரரைப் பற்றிக் குறிப்பிடுகையில் யேசு கிறீஸ்து கூறினார், "ஓர் ஒட்டகம் ஊசியின் கண்ணுக்குள் நுழைவது சுலபமாகவிருக்கும், ஆனால், ஒரு பணக்காரனுக்கு மோட்ச சாம்ராஜ்ஜியத்தினுள் நுழைவது மிகக் கடினமாகவிருக்கும்." மேலும், அவர் கூறியதாவது, "ஒரு மனிதனுக்கு உலகப் பொருள் எல்லாவற்றையும் பெற்றிருந்தபோதிலும் ஆத்மீக வளர்ச்சியை வளர்க்காவிடின், அவன் வாழ்ந்ததில் ஒரு பயனுமில்லை" காந்தி கூறினார், "ஏழைகளின் இருதயங்களில் இறைவன் வீற்றிருக்கிறான்"

கிறீஸ்துநாதர் ஆழ்ந்த ஆத்மீக உண்மைக் கருத்துக்களை உவமானங்கள் மூலம் சாதாரண மக்களுக்கு விளங்கக்கூடிய வகையில் போதனை செய்து வந்தார். மகாத்மா காந்தியும், ஆத்மீகக் கருத்துக்களையும், வாழ்க்கையின் தத்துவங்களையும் சிந்தித்ததும், பேசியதும், எழுதியதும், எல்லா மக்களுக்கும் விளங்கக்கூடிய வகையில்தான்.

கிறீஸ்துநாதர் சீனை மலையின் உச்சியில் நின்று நிகழ்த்திய பிரசங்கத்தின்படி, நாம் அவற்றை அனுஷ்டித்து வாழ்வோமானால், ஒரு பரிசுத்தமான, புனித வாழ்க்கையை வாழலாம். அத்துடன், அவர் போதித்த வண்ணம் வாழ்வோமாயின், உலகத்தில் ஒவ்வொரு நிலையிலும் சமாதானம் நிலவுவது நிட்சயமே!

மகாத்மா காந்தி வெள்ளையரின் ஆட்சியை இந்திய மண்ணிலிருந்து தகர்த்தெறிந்து இந்தியாவுக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுத்தார். இதன் விளைவினால், தென், தென் — கிழக்கு ஆசிய நாடுகளும், கிளர்ச்சியின்றி, போரின்றி விடுதலை அடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய விடுதலைக்குக் காந்தி ஆயுதங்களின்றிப் போராடியவர். ஆனால், இரண்டே இரண்டு ஆயுதங்களைப் பாவித்தார். ஒன்று சத்தியம். மற்றது அஹிம்சை. இதன்மூலம் எத்தனையோ விடயங்களில் வெற்றியை ஈட்டினார். உடலளவில், அவர் மெலிந்த நலிந்த தோற்றத்தையுடையவர்.

இந்த மென்மையான உடலினிற்குள், ஆத்மீக பெலம் பெற்றிருந்தார். இதன் காரணத்தினாலே அவர் அரசியல், பொருளாதாரம் படிப்பு, பண்பு, சமுதாயம் எல்லாத்திற்கும் மேலாகச் சமயத்திலும் வெற்றி கண்டார். உண்மையாகவே அவர் ஓர் அரசியல் சாது.

அவர் மரக்கறி மாத்திரம் சாப்பிடுவார். அவர் ஓர் உண்மையான, கர்மயோகி. அவர் விரும்பிச் சாப்பிடுவது ஆட்டுப் பால், கொஞ்சத் தேன், அத்துடன் பழங்கள்.

நாட்டில் கலகம் பிறந்தால், அவர் உண்ணாவிரதம் இருப்பார். அவர் ஒரு முறைக்கு மேல் உண்ணாவிரதம் பூண்டுள்ளார். இந்து — முஸ்லீம் கலவரம் அவருக்குக் கவலையைக் கொடுத்தது.

கலவரங்கள் நடக்கும் இடங்களுக்குத் தயக்கமின்றி, பயமின்றிச் செல்லுவார் ஆனால், அவருடைய உயிருக்கு ஆபத்து நேரவில்லை. பதிலாக கலவரத்தில் ஈடுபட்ட இரு சாராரும் காந்தியைக் கண்ட மாத்திரத்திலே இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடுவார்கள். இது அவரின் ஆத்மீக வலிமைக்குச் சான்று.

இறுதியில், மாலைப் பிரார்த்தனைக் கூட்டத்துக்குச் சென்றுகொண்டிருக்கும் வேளையில் விளக்கமில்லாத ஒரு பைத்தியக்காரனின் குண்டுகளுக்கு இரையாகித் தன் உயிரை நீத்தார். இருபதாம் நூற்றாண்டின் பெரும் மகானை இழந்து உலகம் முழுவதும் துக்கத்தில் ஆழ்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைத் தத்துவங்கள்

பெண்டிர் சொல் கேளாதவன் முழு மடையன். முழுக்க, முழுக்கக் கேட்பவன் முழு முட்டாள்.

* * *

இதய சுத்தியுடையவரை யாவரும் விரும்புவர்.

* * *

இறைவனைக் காண்பது இலேசான காரியமல்ல. ஆகையால், கர்ம யோகத்தில் ஈடுபடுவதே மேன்மை நிலைக்குக் கொண்டு செல்லும்.

* * *

இந்தக் குரங்கு மனத்தைக் கட்டுப்படுத்துவது மிகச் சிரமமான ஒரு காரியம். இறைவழிபாடும், தூய எண்ணங்களும், சதா பற்றற்ற சேவையில் ஈடுபடுவதும், ஒரு வழிக்குக் கொண்டுவர ஒரு நல்ல உபாயம்.

* * *

சுயநலவாதியின் இருதயத்தில் அன்பு குடிகொள்ளமாட்டாது. அன்பே ஒருவனைப் பொதுநலவாதியாக்கும். இது இறைவன் செயல்.

—

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்
238'P

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org